# ஸ்ரீதணிகை பஞ்சாங்கம் - பாலு சரவண சர்மா

பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர், ஜோதிஷர், பஞ்சாங்க கணிதக்ஞர்
9, 4வது தெரு, கல்யாண நகர், மேற்கு தாம்பரம், சென்னை 45, கைபேசி: 98403 69677
prohithar@gmail.com www.prohithar.com www.thanigaipanchangam.com


## புரட்டாசி மீ (ஜய ஷூ) மடல்

**புரட்டாசி மாத பிறப்பு**

திருக்கணிதப்படி 17.9.2014 புதன் காலை 6:12 மணி அளவில் கன்னி ரவி பிரவேஸம்
வாக்கியப்படி 17.9.2014 புதன் அன்று மாலை 4:26 மணி அளவில் கன்னி ரவி பிரவேஸம்

---

### நவராத்திரி ஆரம்பம்: 25.9.2014 வியாழன்

சூரிய உதயத்தில் பிரதமை உள்ள நாளே சாஸ்திரப்படி நவராத்திரி பூஜை துவங்கும் நாளாகும்.

**கொலு பொம்மைகளை அடுக்க உகந்த நேரம்**

முன்னாள் புதன் அன்று பகல் 11:43 மணிக்கு மேல் அமாவாசை முடிந்த பின்னர் இராகு காலம் கழித்து பகல் 1:30 மணி மேல் - மாலை 3 மணிக்கு முன்னர் அல்லது இரவு 9:30 -10:00 மணிக்கு முன்னர் கொலு பொம்மைகளை அடுக்க துவங்கலாம்.

**சரஸ்வதி ஸ்தாபனம்: 1.10.2014 புதன்**

துர்காஷ்டமி, மஹா நவமி, சரஸ்வதி பூஜை,ஆயுத பூஜை : 2.10.2014 வியாழன்
வாக்கியப்படி ஸ்மார்த விஜய தசமி 3.10.2014 வெள்ளி
திருக்கணிதப்படி ஸ்மார்த விஜயதசமி 4.10.2014 சனி

**வைஷ்ணவ முறைப்படி**

வைஷ்ணவ சரஸ்வதி பூஜை, வைஷண்வ மஹா நவமி, வைஷ்ணவ ஆயுத பூஜை 3.10.2014 வெள்ளி
வைஷ்ணவ விஜயதசமி 4.10.2014 சனி

வசதி படைத்தவர்கள் ஆயுத பூஜை அன்று கிராமத்தில் சுயதொழில் செய்பவர்களுக்கு தொழில் கருவிகளை தானமாக தரலாம் (உதாரணம் : கிராமத்து வண்ணார்களுக்கு இஸ்திரி பெட்டி, ஏழை பெண்களுக்கு தையல் இயந்திரம் )

---

### மங்கள சஷ்டி

செவ்வாய் அன்று சஷ்டி வருவது திருமுருகனுக்கு மிகவும் விசேஷமானது. செவ்வாய் தோஷம் உடையவர்கள், தொழில் போட்டி, வேலையிடத்தில் தொல்லை, எதிரிகள் தொல்லை நீங்க, நோய் நீங்க முருகனை சுப்ரமண்ய திரிசதி அர்ச்சனை செய்து வழிபடமிகவும் உகந்த நாள். அன்று ஆதரவற்றோர் இல்லத்தில் துவரம் பருப்பு தானம் செய்தல் நன்று

---

### மஹாளைய பட்சம்:

மூதாதையர் வழிபாட்டிற்கு மிகவும் உகந்த காலமான இந்நாளில் தானம், தர்பணம், பிண்ட பூஜை செய்து காலம் சென்ற முன்னோர்களின் ஆசியை பெருவது நன்று. தவறாமல் இக்காலத்தில் தினமும் பசுவிற்கு கோதுமை தவிடு, அகத்திகீரை தருதல் நன்று. இத்தினங்களில் வேத பாட சாலைக்கு அரிசி மளிகை பொருள் வழங்குவதும் மிகவும் புண்ணியம் தரும்.

அமாவாசை தர்பணம் செய்ய ராகு காலம், எமகண்டம் பார்க்கவேண்டியதில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மஹாஷ்டமி | 16.9.2014 | செவ்வாய் | வியதீபாத சிரா | 17.9.2014 | புதன் |
| அவிதா நவமி | 17.9.2014 | புதன் | ஏகாதசி | 19.9.2014 | வெள்ளி |
| சன்யஸ்த | 20.9.2014 | சனி | கஜசாயை | 21.9.2014 | ஞாயிறு |
| சஸ்ரஹத | 22.9.2014 | திங்கள் | **மஹாளயம் அமாவாசை** | **23.9.2014** | **செவ்வாய்** |

---

### சனி - திருவோணம் - ஏகாதசி

சனிக்கிழமை அன்று திருவோணமும், ஏகாதசியும் இணைந்து வருவது மகாவிஷ்ணுவிற்கு மிகவும் உகந்த நாளாகும் . **மாணவர்கள் கல்வியில் சிறக்க** அன்று மாலை பெருமாள் கோவில் சென்று வழிபடுவது நன்று.

---

### மாலை நேர சுபநாட்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18.9.2014 | வியாழன் | 25.9.2014 | வியாழன் | 26.9.2014 | வெள்ளி | 29.9.2014 | திங்கள் |
| 03.10.2014 | வெள்ளி | 05.10.2014 | ஞாயிறு | 09.10.2014 | வியாழன் | 13.10.2014 | திங்கள் |

---

### கணபதி ஹோமம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 18.9.2014 | வியாழன் | 26.9.2014 | வெள்ளி | 01.10.2014 | புதன் | 12.10.2014 | ஞாயிறு |
| 19.9.2014 | வெள்ளி | 28.9.2014 | ஞாயிறு | 05.10.2014 | ஞாயிறு | 13.10.2014 | திங்கள் |
| 21.9.2014 | ஞாயிறு | 29.9.2014 | திங்கள் | 06.10.2014 | திங்கள் | 15.10.2014 | புதன் |

## சுபநாட்கள் விளக்கம்

புரட்டாசி 02 வியாழன் 18.9.2014
அதிகாலை முதல் நாள் முழுவதும் அனைத்து சுபம் நன்று

புரட்டாசி 03 வெள்ளி 19.9.2014
அதிகாலை 4½ - 6 மட்டும் கணபதி ஹோமம் செய்ய நன்று.

புரட்டாசி 05 ஞாயிறு 21.9.2014
அதிகாலை முதல் காலை 6 மணி நவக்கிரக பரிகார ஹோமம் - பூஜை செய்ய நன்று

புரட்டாசி 09 வியாழன் 25.9.2014
மாலை 3 மணிக்கு மேல் நன்று.

புரட்டாசி 10 வெள்ளி 26.9.2014 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

புரட்டாசி 12 ஞாயிறு 28.9.2014
சுக்ல சதுர்த்தியில் அதிகாலை 4:30 - 6:00 கணபதி ஹோமம் செய்ய நன்று

புரட்டாசி 13 திங்கள் 29.9.2014 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று.

புரட்டாசி 15 புதன் 01.10.2014
அதிகாலை 4:30 - 6 மட்டும் கணபதி ஹோமம் செய்ய நன்று..

புரட்டாசி 17 வெள்ளி 03.10.2014
காலை 10 மணிக்கு மேல் இரவு 8 மணி வரை நன்று.

புரட்டாசி 19 ஞாயிறு 05.10.2014
அதிகாலை 4:30 - 6:00 கணபதி ஹோமம் செய்ய நன்று.
மாலை 6 மணி முதல் நள்ளிரவு வரை சுபம் செய்ய நன்று.

புரட்டாசி 20 திங்கள் 06.10.2014 சுபதினம்
அதிகாலை முதல் பகல் 1:30 மணி வரை அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

புரட்டாசி 23 வியாழன் 09.10.2014
மாலை 3 மணி மேல் அனைத்து சுபங்கள் செய்ய நன்று.

புரட்டாசி 26 ஞாயிறு 12.10.2014
கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் அதிகாலை 4:30 - 6:00 கணபதி ஹோமம் செய்ய நன்று

புரட்டாசி 27 திங்கள் 13.10.2014 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று. அனைத்து சுபங்கள் செய்ய உகந்த நாள்.

புரட்டாசி 29 புதன் 15.10.2014
அதிகாலை 4:30 - 6:00 கணபதி ஹோமம் மட்டும் செய்ய நன்று. சூரிய உதயம் பின் கரிநாள்.

## புரட்டாசி மாத முகூர்த்த நாள்

| த.தே | கிழமை | ஆ.தே | திதி | நட் | யோ | லக் | நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | வியாழன் | 18.09.2014 | தே.தசமி | புனர்பூசம் | அ | துலாம் | 08:00 - 09:30 |
| 2 | வியாழன் | 18.09.2014 | தே.தசமி | புனர்பூசம் | அ | விருச்சி | 10:00 - 11:30 |
| 10 | வெள்ளி | 26.09.2014 | வ.திருதியை | சித்திரை | சி | விருச்சி | 09:30 - 10:30 |
| 13 | திங்கள் | 29.09.2014 | வ.பஞ்சமி | அனுஷம் | சி | விருச்சி | 09:30 - 10:30 |
| 17 | வெள்ளி | 03.10.2014 | வ.தசமி | உத்திராடம் | சி | விருச்சி | 09:00 - 10:30 |
| 20 | திங்கள் | 06.10.2014 | வ.திரியோதசி | சதயம் | சி | துலாம் | 09:00 - 10:30 |
| 24 | வெள்ளி | 10.10.2014 | தே.துவிதியை | அசுவினி | அ | துலாம் | 07:00 - 08:30 |
| 26 | ஞாயிறு | 12.10.2014 | தே.சதுர்த்தி | ரோஹிணி | சி | தனுஸ் | 10:30 - 12:00 |
| 27 | திங்கள் | 13.10.2014 | தே.பஞ்சமி | மிருகசீருஷம் | அ | துலாம் | 06:30 - 07:30 |

## அஷ்டம சுத்தியான நேரம் (பத்திர பதிவு, வாகனம் வாங்க, பிரயாணம்)

| | |
|---|---|
| 18.9.2014 வியாழன் | : காலை 7:30 - பகல் 1:30, இரவு 9:30 - 11:30 |
| 25.9.2014 வியாழன் | : இரவு 9 - 10:30 |
| 26.9.2014 வெள்ளி | : காலை 5:30 - பகல் 10:30, பகல் 12 - மாலை 3, இரவு 9:30 -10:30 |
| 29.9.2014 திங்கள் | : காலை 5:15 - 7:30 வரை, 9 -10:30, பகல் 12 - 3:30, இரவு 9 - 10:30. |
| 03.10.2014 வெள்ளி | : பகல் 10 - 10:30, நன் பகல் 12 - 3. |
| 06.10.2014 திங்கள் | : அதிகாலை 4:45 - 7:30, காலை 9 - 10:30, பகல் 12 - 1:30 |
| 09.10.2014 வியாழன் | : இரவு 8 - 10 |
| 12.10.2014 ஞாயிறு | : அதிகாலை 4:30 - 6, காலை 8:30 - 12, பகல் 1:30 - 2:30, இரவு 8 - 9:30 |
| 13.10.2014 திங்கள் | : அதிகாலை 4:30 - 6, காலை 9 - 10:30, 12 - 2:30, இரவு 8 - 9:30 |

## மூதாதையர் வழிபாடு நாள்

செப்டம்பர்: 17 முதல் 24 வரை, 27　　அக்டோபர்: 1,2,4,8,10,12,15,16,17

## சாந்தி முகூர்த்த நேரம்:

| | | | |
|---|---|---|---|
| 18.9.2014 வியாழன் | : இரவு 9:30 - 11:30 | 25.9.2014 வியாழன் | : இரவு 9 - 10:30 |
| 26.9.2014 வெள்ளி | : இரவு 9:30 -10:30 | 29.9.2014 திங்கள் | : இரவு 9 - 10:30. |
| 05.10.2014 ஞாயிறு | : இரவு 8 -10 | 09.10.2014 வியாழன் | : இரவு 8 - 10 |
| 12.10.2014 ஞாயிறு | : இரவு 8 - 9:30 | 13.10.2014 திங்கள் | : இரவு 8 - 9:30 |

## சீமந்தம் - காதுகுத்தல் - திருமுடி இறக்கம் நல்ல நேரம்

| | |
|---|---|
| 18.9.2014 வியாழன் | : காலை 7:30 - பகல் 1:30 |
| 26.9.2014 வெள்ளி | : காலை 5:30 - பகல் 10:30, பகல் 12 - மாலை 3 |
| 29.9.2014 திங்கள் | : காலை 5:15 - 7:30 வரை, 9 -10:30, பகல் 12 - 3:30, |
| 03.10.2014 வெள்ளி | : பகல் 10 - 10:30, நன் பகல் 12 - 3. |
| 06.10.2014 திங்கள் | : அதிகாலை 4:45 - 7:30, காலை 9 - 10:30, பகல் 12 - 1:30 |
| 12.10.2014 ஞாயிறு | : அதிகாலை 4:30 - 6, காலை 8:30 - 12, பகல் 1:30 - 2:30 |
| 13.10.2014 திங்கள் | : அதிகாலை 4:30 - 6, காலை 9 - 10:30, 12 - 2:30 |

## விரதாதி நாட்கள்:

ஏகாதசி 19.9.2014 வெள்ளி
மஹாளைய அமாவாசை 23.9.2014 செவ்வாய்
சுக்ல சதுர்த்தி 28.9.2014 ஞாயிறு
ஏகாதசி 4.10.2014 சனி
சோம சுக்ல பிரதோஷம் 6.10.2014 திங்கள்
சங்கடஹர சதுர்த்தி 11.10.2014 சனி
நடராஜர் அபிஷேகம்: 7.10.2014 செவ்வாய் மாலை

சிவராத்திரி 22.9.2014 திங்கள்
சந்திர தரிசனம் 25.9.2014 வியாழன்
சஷ்டி : 30.9.2014 செவ்வாய்
திருவோணம்: 4.10.2014 சனி
பௌர்ணமி 7.10.2014 செவ்வாய்
கிருத்திகை 11.10.2014 சனி

வைத்திருதி சிரார்தம்: 27.9.2014 சனி
வ்யதீபாத சிரார்தம்: 12.10.2014 ஞாயிறு

வ்யதீபாத சிரார்தம்: 17.9.2014 புதன்
துலா விஷூ புண்ணியகாலம் 17.10.1014

## வானவியல் நிகழ்வு

| | | |
|---|---|---|
| புணர்பூசம் நிலவின் அருகில் | 2014 Sep 19 00 | 12.09° North |
| குரு நிலவின் அருகில் | 2014 Sep 20 16 | 5.44° North |
| நிலவு தொலைவுநிலையில் | 2014 Sep 20 20 | 405820.686 km |
| சித்திரை புதன் அருகில் | 2014 Sep 21 07 | 0.62° North |
| மகம் நிலவின் அருகில் | 2014 Sep 22 01 | 4.65° North |
| புதன் மீ உயர்நிலை தோற்றம் | 2014 Sep 22 04 | 26.4° East |
| சமநாள் | 2014 Sep 23 08 | |
| சுக்கிரன் நிலவின் அருகில் | 2014 Sep 23 21 | 4.02° North |
| அமாவாசை நிலவு | 2014 Sep 24 12 | 400738.582 km |
| சித்திரை நிலவின் அருகில் | 2014 Sep 26 07 | 2.60° South |
| புதன் நிலவின் அருகில் | 2014 Sep 26 15 | 4.24° South |
| கேட்டை அருகில் செவ்வாய் | 2014 Sep 28 02 | 3.12° South |
| சனி நிலவின் அருகில் | 2014 Sep 28 10 | 0.73° South |
| கேட்டை நிலவின் அருகில் | 2014 Sep 29 20 | 8.69° South |
| செவ்வாய் நிலவின் அருகில் | 2014 Sep 29 23 | 5.65° South |
| நிலவு அன் மை நிலையில் | 2014 Oct 6 15 | 362515.243 km |
| முழு நிலவு | 2014 Oct 8 16 | 365662.270 km |
| ரோகினி நிலவின் அருகில் | 2014 Oct 12 16 | 1.37° South |
| புணர்பூசம் நிலவின் அருகில் | 2014 Oct 16 07 | 12.14° North |
| சித்திரை அருகில் புதன் | 2014 Oct 16 17 | 0.48° South |
| புதன் உள் சேர்கை | 2014 Oct 17 02 | 1.48° South |
| சுக்கிரன் புதன் அருகில் | 2014 Oct 17 13 | 2.73° North |






புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் தவறாமல் நெற்றியில் நாம திருமண் இட்டு **“கோவிந்தா”** என் று கூறி விஷ்ணுவின் ஆசிர்வாதத்தை பெறுங்கள்.

**8.10.2014 புதன் ஸ்ரீஜய புரட்டாசி 22 - முழு சந்திர கிரஹணம்**

**கிரகண ஆரம்பம்: பகல் 1:42 உச்சம்: மாலை 4:25 முடிவு: இரவு: 7:05**

8.10.2014 அன்று பகலில் சூரியன் இருக்கும் பொழுது இந்திய நேரப்படி பகல் 1:42 மணிக்கு புறநிழல் கிரகணம் துவங்கி, பகல் 2:44 மணி அளவில் நிஜநிழல் கிரகணமாக பிரவேஸிக்கிறது, . கிரகணம் உச்சகட்டமாக மாலை 4:25க்கு அடைகிறது.

அன்று சென்னையில் சூரிய அஸ்தமனத்திற்கு பின்னர் சுமார் 10 நிமிடங்கள் மட்டுமே அதாகில் மாலை 6:04 வரை மட்டுமே நிஜ நிழல் கிரகணம் தெரியும், பின்னர் புறநிழல் (Penumbral) கிரகணம் இரவு 7:05 வரை தெரியும் (சுமார் 1 மணி 11 நிமிடங்கள்). பரிமாணம் 1.172. சந்திர உதயம் மாலை 5:54

சூரியமறைவின் பொழுது அடிவானில் மேகமூட்டம், வளிமண்டல ஒளிச்சிதைவு, ஈரப்பதன் காரணமாக நிஜகிரஹணத்தினை காண்பது அரிதாகும், ஆயினும் புறநிழல் கிரகணத்தை காணலாம் (சந்திரனின் ஒளி சற்று மங்கலாக இருக்கும்). இதை வெறும் கண்களால் கிழக்கு திசையில் காணலாம். பூர்ண சந்திர கிரஹணம்(கேது கிரஸ்த) தூம்ர வர்ணம்.

ஆகாய பார்வை திசை : தென் மேற்கில் (நிருதி) துவங்கி வடகிழக்கில்(ஈசான்யம்) முடிவு.

ரேவதி நட்சத்திரத்தில் கிரஹணம் நிகழ்கிறது. உத்திரட்டாதி, ரேவதி, அஸ்வினி, ஆயில்யம், கேட்டை நட்சத்திரத்தினர் விநாயகருக்கு அர்ச்சனை செய்யவும். அன்று பகலில் 1:42 மேல் போஜனம் இல்லை. கிரகணம் முடிந்த பின் தலைக்குளியல் செய்து உணவு உட்கொள்ளவும். (உடல் நலம் குன்றியவர்கள், குழந்தைகள், கர்பினிகளுக்கு இது பொருந்தாது)

---

# அபிஜித் முகூர்த்த கால கணணம்




அபிஜித் முகூர்த்தம் என்பது ஒரு பகல் பொழுதில் 15ல் 8ம் பாகம் ஆகும். சூரியன் காலை 6 மணிக்கு உதித்து மாலை 6 மணிக்கு அஸ்தமனம் ஆகும் நாளில் மட்டும் 48 நிமிடங்கள்(ஒரு முகூர்த்த காலம் = 2 நாழிகை) இருக்கும். அன்று பகல் 11:36 முதல் நன் பகல் 12:24 வரை அபிஜித் முகூர்த்த காலமாகும்

சூரிய உதயம், அஸ்தமனம் மாறும் பொழுது பகல் (அகஸ்) பொழுதின் கால அளவும் மாறும் அதனால் அபிஜித் முகூர்த நேரமும் மாறும். அட்சரேகை (Latitude), கால கோட்பாடு வரைவு (Equation of time & Analemma) அடிப்படையிலும் அபிஜித் முகூர்த்த கால அளவும் மாறும்.

$$\text{Abajit Begin} = \frac{\text{Sun Set - Sun Rise}}{15} \times 7 + \text{Sun Rise}$$

$$\text{Abajit End} = \frac{\text{Sun Set - Sun Rise}}{15} \times 8 + \text{Sun Rise}$$

அபிஜித் முகூர்தத்தில் அனைத்து விதமான சுபகாரியங்களும், அனைத்து நாட்களிலும் செய்யலாம். அனைத்து தோஷங்களையும் போக்கவல்ல சுபமுகூர்த்த நேரமாகும் இது. ராகு காலம், எமகண்டம், திதி, நட்சத்திர தோஷம் இதற்கு பொருந்தாது.

***குறிப்புகள்***

- ***✱ சூரிய அஸ்தமனம் 24 மணி நேர முறையில் வைத்து கணிக்கவும்***
- ***✱ சூத்திரத்தை Scientific Calculator ல் “DMS” முறையில் கணிக்கவும்***
- ***✱ பகல் பொழுதில் ஒரு முகூர்த்திற்கு ஒரு தேவகண தலைவர் அதிதேவதையாக இருப்பார் அந்த வகையில் மேற்படி 8ம் பாகத்திற்கு “அபஜித் தேவகண தலைவர் “ அதி தேவதை ஆகிறார்***
- ***✱ அபிஜித் முகூர்த்த காலம் வேறு, “அபிஜித் நட்சத்திரம்” தோற்ற - மறைவு காலம் வேறு***

## உதாரண கணிதம் (மணி, நிமிடம், விநாடியில் தரப்பட்டுள்ளது)

**பகல் அகஸ்** = சூரிய அஸ்தமனம்(18:05) - சூரிய உதயம் (06:03) = 12:02:00

**ஒருபாகம்** = பகல் அகஸ்(12:02) / 15 = 00:48:08

**அபஜித் துவக்கம்** = 00:48:08 X 7 + சூரிய உதயம் (06:03) = 11:39:56 மணி

**அபஜித் முடிவு** = 00:48:08 X 8 + சூரிய உதயம் (06:03) = 12:28:04 மணி

முடிவு: பகல் 11:39:56 மணி முதல் பகல் 12:28:04 மணி வரை அபஜித் முகூர்த்த காலம்.

---

ஸ்ரீதணிகை பஞ்சாங்கம் - பாலு சரவண சர்மா

பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர் - ஜோதிடர்- பஞ்சாங்க கணிதக்ஞர்

| www.prohithar.com | www.thanigaipanchangam.com |